யவர் முதல்வர்தான். தலைமைச் செயலாளர் அல்ல. அந்தப் பொறுப்பை ஏற்று அதற்கான அரசியல் விலையை முதலமைச்சர் தர வேண்டும். மற்றவர்களைப் பலிகடா ஆக்குவது நல்ல மரபு ஆகாது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : காங்கிரஸ் ஆளுகிற கர்நாடகா மாநிலத்தில் தலைமைச் செயலாளர் மாற்றப்பட்டிருக்கிறார். அதற்கு திரு. பங்காரப்பா பொறுப்பேற்க வேண்டுமா ?

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : அவர்களுக்குள்ளே ஒரு தகராறு வந்து அதுபற்றி பத்திரிகைகளில் வந்திருக்கின்றன. ஆனால் இங்கே சொல்லுங்கள். நீங்கள் எந்த அடிப்படையில் மாற்றினீர்கள், எந்தச் சூழ்நிலையில் மாற்றினீர்கள் ? சரியாக இருக்குமானால் ஏற்றுக்கொள்கிறேன்.

கடைசியாக,

'செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்'

என்னும் வள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப செய்ய வேண்டியது என்ன என்பதை நன்குணர்ந்த முதல்வர் அதைச் செய்து முடிப்பதே சூழவிருக்கும் கேட்டிலிருந்து தன்னை காத்துக்கொள்ள உதவும் என்று கூறி அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (24-1-91) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை 14-01 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

10. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

86. குரோம் தோல் பதனிடும் பொருட்களுக்கு சலுகை முறையில் வரிவிதிப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 25-7-1990 ஆம் நாளிட்ட 463 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

1991 சனவரி 23]

87. 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நாட்டு மதுபான (சில்லரை விற்பனை) விதிகளை வகுப்பது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 28—5—1990 ஆம் நாளிட்ட 632 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

88. தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும்வளர்ச்சிக் கழகத்தின் 1988-89-ஆம் ஆண்டிற்கான பதினைந்தாவது ஆண் டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ்—ஆங்கிலம்).

89. தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி வளர்ச்சிக் கழகத்தின் 1989-90-ஆம் ஆண்டிற்கான பதினாறாவது ஆண் டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

90. தமிழ்நாடு கரும்பு பண்ணைக் கழகத்தின் 1986-87ஆம் ஆண்டிற்கான பதின்மூன்றாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

24. பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்தொன்பதாவது அறிக்கை, 1990-91 (தமிழ், ஆங்கிலம்).

25. பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பதாவது அறிக்கை, 1990-91 (தமிழ்)

26. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்திரண்டாவது அறிக்கை, 1990-91. (தமிழ்)

27. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்தி மூன்றாவது அறிக்கை, 1990-91 (தமிழ், ஆங்கிலம்)

28. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்தி நான்காவது அறிக்கை, 1990-91 (தமிழ்).